# முக்கியமான தலைவர்கள்

## தாதா பாய் நௌரோஜி

- சிறப்பு – இந்தியாவின் முதுபெரும் மனிதர்.
- பெருந்தலைவர்களாக போற்றப்பட்ட பாலகங்காதர திலகர், காந்தி உட்பட முன்னனி தலைவர்கள் பலர் தங்களுக்கு வழிகாட்டியாக தாதாபாய் நௌரோஜியை குறிப்பிட்டுள்ளனர்.
- இந்தியாவின் முதலாவது பொருளாதார சிந்தனையாளர்.
- இந்தியாவின் தேசிய வருமானத்தை முதன் முதலாக கணக்கிட்டவர்.
- 1870–ம் ஆண்டு **தலா வருமானத்தை** கணக்கிட்டு இந்தியாவின் தலா ரூ.20 என்று சுட்டிகாட்டினார்.
- 1867–இல் வடிகால் கொள்கையினை வெளியிட்டவர்.
- 1901–ம் ஆண்டில் **'வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்'** (Poverty and unbritish Rule in India) என்ற நூலில் செல்வ சுரண்டல் கோட்பாட்டை விளக்கினார்.
- **மூன்று** முறை இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக செயல்பட்டார்.
- **1886 – கல்கத்தா**
- **1893 லாகூர்**
- **1906 – கல்கத்தா**
- 1892–இல் ஃபின்ஸ்புரி தொகுதியிலிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியா.
- 1895–இல் ராயல் கமிஷனில் உறுப்பினராக இடம் பெற்ற முதல் இந்தியர்.
- 1906–ம் ஆண்டின் இந்திய தேசிய காங்கிரஸ் (கல்கத்தா) மாநாட்டில் இவரது தலைமையில் சுயராஜ்யம் என்ற வார்த்தை முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது.
- **இலண்டனில் இந்திய சங்கம் 1865, கிழக்கிந்திய கழகம் 1866** என்னும் அமைப்புகளை உருவாக்கினார்.

- இந்திய தேசிய யூனியன் என்ற பெயரை இந்திய தேசிய காங்கிரஸ் என பெயர்மாற்றம் செய்தவர்.
- **பத்திரிக்கைகள்**
- 1883 – இந்தியாவின் குரல் (இந்திய தேசிய காங்கிரசின் முதல் பத்திரிக்கை)
- 1854 – ராஸ்ட் கோப்தார்
- **இவரின் சிறப்புகள்**
- இந்தியாவின் முதுபெரும் மனிதர்
- இந்திய கிளாட்ஸ்டோன்
- இந்தியாவின் அதிகாரபூர்வமற்ற தூதர்
- **பிற தகவல்கள்**
- 1851 – ஜோராஸ்ட்ரிய மதத்தைப் புதுப்பிக்க **ரஹ்னுமே மஸ்தயாஸனே சபா.**
- 1855 – மும்பை எல்பின்ஸ்டோன் கல்லூரியில் கணிதம் மற்றும் இயற்கை தத்துவப் பேராசிரியர். அத்தகைய பதவியை வகித்த முதல் இந்தியர் இவர்தான். பின்னர். நௌரோஜி லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் குஜராத்தி பேராசிரியராகவும் பணியாற்றினார்.
- 1865 லண்டன் இந்தியா சொசைட்டி – இந்திய அரசியல், சமூக மற்றும் இலக்கியப் பாடங்களில் கருத்துக்களை முன்வைத்தது.
- 1867 – கிழக்கிந்திய சங்கம் – இந்தியக் கண்ணோட்டங்களை பிரித்தானியப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.
- 1874 –பரோடா மகாராஜாவின் திவானாக அரசியல் வாழ்க்கை தொடங்கியது.
- 1885 –88: மும்பையின் சட்ட மேலவை உறுப்பினர்
- 1885 – இந்திய தேசிய காங்கிரஸின் நிறுவியவர்களில் ஒருவர்
- 1892 – ஹவுஸ் ஆஃப் காமன்ஸுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட போது, பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரான முதல் ஆசியர்

- 1896 – இந்திய செலவினங்களுக்கான **ராயல் கமிஷன்** 1896 இல் அமைக்கப்பட்டது.
- இந்தியாவின் நிதிச் சுமைகளை மதிப்பாய்வு செய்த இந்தக் கமிஷனில் நௌரோஜியே உறுப்பினராக இருந்தார்.
- அரசியலில் புள்ளிவிவரங்களைக் கொண்டு வந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர்.
- 1901 – 'இந்தியாவில் வறுமை மற்றும் பிரித்தானிய ஆட்சி' செல்வத்தின் வடிகால் கோட்பாடு
- அவர் **மகாத்மா காந்தி, பால கங்காதர திலகர் மற்றும் கோபால கிருஷ்ண கோகலே** ஆகியோருக்கு வழிகாட்டியாக செயல்பட்டார்.
- அவர் 1917 இல் பம்பாயில் 91 வயதில் இறந்தார்.

## மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

- காலம்: 02.10.1869–30.01.1948
- பிறப்பு: போர்பந்தர், குஜராத்
- பெற்றோர்: காபாகாந்தி (அ) கரம் சந்த் காந்தி புத்திலிபாய்
- **வாழ்க்கை**
- இவரின் தந்தை போர்பந்தர் அரசின் திவானாக பணிபுரிந்தார்.
- 1883 ஆம் ஆண்டில் 13 வயதான காந்தி 14 வயதுடைய கஸ்தூரிபாய் மகஞ்சி கபாடியாவை மணம் புரிந்தார்.
- காந்தி இளம் வயதில் படித்த நூல் **சிரவணண் பிதுர்பக்தி**
- காந்தி 'அரிச்சந்திரன் நாடகத்தை பார்த்து ' உண்மையே பேச வேண்டும் என்பதை உணர்ந்தார்.
- 1888–ல் பாரிஸ்டர் பட்டம் வாங்க லண்டன் பயணம்
- 1891–ல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்
- **தென்னாப்பிரிக்காவில் ஆரம்பகால போராட்டங்கள்**
- 1893(ஏப்ரல்) – தென் ஆப்பிரிக்கா பயணம் சென்றார்.

- தென்னாப்பிரிக்காவில்தான் முதன்முறையாக அவர் இனவெறியை எதிர்கொண்டார்.
- தென் ஆப்பிரிக்காவில் காந்தி வெளியிட்ட நூல் **'இந்தியன் ஒபினியன்'** (Indian opinion)
- **காந்தியடிகளுக்கு தாக்கம் ஏற்படுத்திய புத்தகம்**
- **1. கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது.**
- **2. அண்டு திஸ் லாஸ்ட்**
- **3. சட்டமறுப்பு**
- ஃபீனிக்ஸ் குடியிருப்பை (1905) டால்ஸ்டாய் பண்ணையை (1910) நிறுவினார்.
- வணிகரான தாதா அப்துல்லாவின் வழக்கிற்கான வழக்குரைஞராக 1893 ஆம் ஆண்டில் காந்தி தென் ஆப்பிரிக்கா சென்றார்.
- 1893 ஆம் ஆண்டு ஜுன் 07 அன்று 'வெள்ளையருக்கு மட்டும் என ஒதுக்கப்பட்டிருந்த ரயில் பெட்டியில் பயணம் செய்த காரணத்தால் தென் ஆப்பிரிக்காவின் பீட்டர்மாரிட்ஸ்பெரக நிலையத்தில் அவர் இரயிலிருந்து வெளியேற்றப்பட்டார்.
- தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிராக போராட **"நடால் இந்திய காங்கிரஸை" 1894** ஆம் ஆண்டு நிறுவினார்.
- இந்தியன் ஒப்பீனியன் எனும் பெயரில் செய்தித்தாள் ஒன்றை 1903 ஆம் ஆண்டு ஜூன் 06 அன்று தென்னாப்ரிக்காவில் நிறுவினார்.
- நடால் இந்திய அவசர கால உதவிப் படையை காந்தி உருவாக்கினார். இப்படை இரண்டாம் போயர் போரின் போது படுக்கையைச் சுமப்பவர்களாக ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்டது.
- 1906 ஆம் ஆண்டு செப்டம்பரில் உள்ளூர் வாழ் இந்தியர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டிரான்ஸ்வால் ஆசிய அவசரச் சட்டத்தினை எதிர்த்து முதல் சத்தியாக்கிரகப் பிரச்சாரத்தை அவர் தொடங்கினார்.
- மீண்டும் 1907 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கருப்புச் சட்டத்திற்கு எதிராக சத்தியாக்கிரகத்தினை அவர் நடத்தினார்.
- மேலும் இவர் 1913 ஆம் ஆண்டு கிறிஸ்தவரல்லாதோரின் திருமணங்களை ரத்து செய்யும் சட்டத்திற்கு எதிராகவும் போராடினார்.

- இரண்டாம் போயர் போரின் போது இந்தியர்களின் அவசரகால உதவிப் பிரிவை உருவாக்கியதற்காக அரசால் காந்திக்கு 1914 ஆம் ஆண்டில் கெய்சர்–இ–ஹிந்த் எனும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- ஆனால் இந்த விருதானது 1919–ல் நடைபெற்ற ஜாலியன்வாலா பாக் படுகொலைக்குப் பின்னர் நடைபெற்ற ஒத்துழையாமை போராட்டத்தின் போது திருப்பி காந்தியால் அளிக்கப்பட்டது.
- இவரின் தென் ஆப்பிரிக்க வாழ்நாளின் போது நீதிமன்றத்தில் காந்தியின் மொழிபெயர்ப்பாளராக ரெட்டைமலை சீனிவாசன் செயல்பட்டார்.
- திருக்குறளின் மகத்துவத்தை புரிந்துகொள்ள இவரிடம் இருந்து காந்தி தமிழ்மொழியை கற்றார்.
- மேலும் அவரிடம் இருந்து 'மோ.க. காந்தி' என்று தமிழ் மொழியில் கையெழுத்திடவும் காந்தி கற்றுக் கொண்டார்
- தில்லையாடி வள்ளியம்மை எனும் தென்னாப்பிரிக்க வாழ் தமிழ்ப் பெண் காந்திக்கு தமிழ் மொழியை கற்பித்துக் கொடுத்தார்.
- காந்தியின் அரசியல் வாழ்க்கையானது தென்னாப்பிரிக்காவில் குடியேறிய ஆசிய மக்களுக்கு எதிரான மோசமான நடத்தைகளை எதிர்த்துத் தொடங்கிய சட்டமறுப்பு இயக்கத்தின் மூலம் ஆரம்பித்தது.
- 1910 ஆம் ஆண்டில் காந்தி அவரின் நண்பரான ஹெர்மன் கல்லென்பேக்கின் உதவியுடன் ஜோகன்னஸ்பர்க்கிற்கு அருகில் தனது தென்னாப்பிரிக்க நடவடிக்கைகளின் செயற்பாட்டுத் தளமாக டால்ஸ்டாய் தோட்டத்தினை நிறுவினார்.
- லியோ டால்ஸ்டாயின் 'இறைவனுடைய அரசு உனக்குள் இருக்கிறது" (The Kingdom of God is Within You') எனும் புத்தகத்தின் வழியாக காந்தி பெரிதும் ஈர்க்கப்பட்டார். இதுவே இவரின் ஆழ்மனதின் குரல் பற்றிய பேச்சிற்க்கும் எளிமையான வாழ்வை வாழ்வதற்கும் காரணமானது.
- தென்னாப்ரிக்காவில் இந்தியர்களின் உரிமையைப் பெறுவதற்காக 1913 ஆம் ஆண்டின் நவம்பரில் பெரிய நடைபயணமொன்றை காந்தி தொடங்கினார்.
- **இந்தியாவிற்குத் திரும்புதல்**

- F. ஆண்ட்ரூஸ் என்பவர் மூலம் தெரிவிக்கப்பட்ட கோபால கிருஷ்ண கோகலேவின் கோரிக்கையை ஏற்று 1915 ஆம் ஆண்டு ஜனவரி 09 அன்று காந்தி இந்தியாவிற்குத் திரும்பினார். இத்தினமானது **பிரவாசி பாரதிய திவாஸ்** என ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.

- **காந்தியின் அடைமொழிகள்**

- CF ஆண்ட்ரூஸ் என்பவருக்கு **'தீனபந்து" (ஏழைகளின் நண்பர்)** எனும் பட்டத்தை காந்தி வழங்கினார்.

- **காந்தியின் அரசியல் குரு கோபாலகிருஷ்ண கோகலே ஆவார்.**

- ரவீந்திரநாத் தாகூர் 1915 ஆம் ஆண்டு அவரின் சுயசரிதையை எழுதும் போது **'மகாத்மா'** எனும் பட்டத்தை காந்திக்கு வழங்கினார்.

- தாகூரை குருதேவ் என காந்தி அழைத்தார்.

- **காந்தியின் போராட்டங்கள்**

- 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் நாள் பீகாரில் உள்ள சம்பாரன் மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் காந்தி கலந்து கொண்டார்.

- சம்பாரன் மாவட்டத்தைச் சேர்ந்த குத்தகைதாரர்கள் அவர்களது நிலத்தின் பெருமுதலாளிகளுக்காக நிலத்தின் ஒவ்வொரு இருபது பாக பரப்பின் மூன்று பாகங்களிலும் இண்டிகோ செடியை (அவுரி) சாகுபடி செய்ய வேண்டும் என்ற தின்சுத்தியா முறையை ஒரு சட்டத்தின் கீழ் கட்டாயப் படுத்தப்பட்டதை எதிர்த்து இந்தப் போராட்டம் நடைபெற்றது.

- பிராஜ் கிஷோர் பிரசாத் ராஜேந்திர பிரசாத், அனுகிரஹ நாராயண் சின்ஹா ராம்நவமி பிரசாத் மற்றும் J.B. கிருபாளினி ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட இதர பிரபலமான தலைவர்களாவர்.

- இதுவே காந்தி இந்தியாவில் மேற்கொண்ட முதல் சத்தியாக்கிரக பரிசோதனையாகும்.

- பின்னர் காந்தி அதற்கான விசாரணைக் குழுவிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

- தின்கத்திய முறையை ஒழிக்கும்படி காந்தி பரிந்துரை செய்தார்.

- 1917 ஆம் ஆண்டு ஜூன் 17 அன்று சபர்மதி ஆற்றங்கரையில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்.
- 1918 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் அகமதாபாத் பருத்தி ஆலைக்கு எதிரான போராட்டத்தை காந்தி தலைமையேற்று நடத்தினார்.
- இது ஆலை முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட பிளேக்
- நோய்க்கான ஊக்கத் தொகை குறித்த கருத்து வேறுபாட்டால் நடைபெற்றதாகும்.
- இது காந்தி மேற்கொண்ட '**முதல் உண்ணாவிரதப் போராட்டமாகும்**".
- முன்னணி ஆலை உரிமையாளர்களில் ஒருவரான அம்பாலால் சாராபாயின் சகோதரியான அனுசுயா பென் காந்தியின் இந்தப் போராட்டத்தில் அவரது பிரதானமான தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கினார்.
- தீர்ப்பாயமானது தொழிலாளர்கள் கோரிய 35% ஊதிய உயர்வை வழங்க உத்தரவிட்ட பின்னர் இந்த போராட்டமானது திரும்பப் பெறப்பட்டது.
- 1918 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேதா மாவட்ட விவசாயிகளின் விவகாரத்தை கையிலெடுத்த காந்தி ஆங்கிலேயருக்கு எதிரானப் போராட்டத்தை முன்னின்று நடத்தினார்.
- சர்தார் வல்லபாய் படேல், இந்துலால் யாக்னிக சங்கர்லால் பங்கர், மகாதேவ் தேசாய், நர்ஹாரி பாரிக், மோகன்லால் பாண்டியா மற்றும் ரவிசங்கர் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட இதர தலைவர்களாவர்.
- காந்தி தொடங்கிய **"முதல் ஒத்துழையாமை இயக்கம்"** இதுவேயாகும்.
- 1915–ல் காந்தி இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்தார்
- **1917 – சம்பரான் சத்தியாகிரகம்**
- **1918–கேதா சத்தியாகிரகம்** (Tax Scrabbing in Gujarat)
- **1918 போராட்டம் அகமதாபாத மில்தொழிலாளர்கள்**
- 1919 பிப்ரவரி காந்தியடிகள் முதன் முறையாக சென்னைக்கு வந்தார்
- பாரதியை சந்தித்த காந்தி அவரை இந்தியாவின் சொத்து என்று அழைத்தார்.

- **1920 ஒத்துழையாமை இயக்கம் காந்தி தலைமையில் நடந்த முதல் அகில இந்திய போராட்டம்**
- 1921செப்டம்பர் மதுரைக்கு விவசாயிகளை கண்டு அரை ஆடை உடுத்தினார்.
- 1922–ஒத்துழையாமை இயக்கம் திரும்ப பெறப்பட்டது (**1922– பிப்ரவரி 5 சௌரி சௌரா நிகழ்ச்சியை தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் திரும்ப பெறப்பட்டது).**
- 1924 காங்கிரஸ் தலைவராக பதவி வகித்த ஒரே மாநாடு, **கர்நாடகாவில் பெல்காம்** என்ற இடத்தில் நடந்தது.
- **1930 –சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கினார்**
- 1930 ( 12 ஏப்ரல் 6 சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியான உப்பு சத்தியாகிரக போராட்டம் காந்தி தலைமையில் நடைபெற்றது. (சபர்மதி ஆசிரமம் தண்டி வரை 400 கி.மீ 78 நபர்கள் பங்கேற்றனர். ஒரே பெண்மணி **சரோஜினி நாயுடு.**
- 1931– இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்பதற்காக காந்தி வைஸ்ராய் இர்வின் பிரபு இடையே காந்தி இர்வின் ஒப்பந்தம் நடைபெற்றது.
- **1931– ல் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் உறுப்பினராக பங்கேற்றார்**
- **1932 (ஆகஸ்ட் 16) –ல் மெக்டொனால்டு நன்கொடையை** (Communal Award) எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார்.
- **1932 பூனா ஒப்பந்தம் (காந்தி அம்பேத்கர் இடையே ஏற்பட்டது) (செப்டம்பர் 24, 1932, எரவாடா சிறையில்)**
- 1937 சென்னை இலக்கிய மாநாடுக்கு தலைமை வகித்தார். அப்பொழுது உவே.சாமிநாதரின் தமிழ் பேச்சைக் கண்டு வியந்தார்.
- 1939 திரிபுரா காங்கிரஸ் மாநாட்டின் காங்கிரஸ் தலைவருக்கான தேர்தலில் சுபாஷ்
- சந்திரபோஸை எதிர்த்து தனது வேட்பாளாரான பட்டாபி சீத்தாராமையாவை நிறுத்தினார்
- 1940 இல் தனிநபர் சத்தியாகிரகம் தொடங்க காரணமாக இருந்தார்
- 1942 இல் கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கையை 'திவாலாகித் பின்தேதியிட்ட கொண்டிருக்கும் வங்கியின் காசோலை' (Post Dated Bank Cheque) என வர்ணித்தார்

- 1942 ஆகஸ்ட் 9ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத் தீர்மானத்தை கொண்டு வந்து அகில இந்திய அளவில்போராட்டம் நடைபெற காரணமாக இருந்தார்.
- 1942–ஆகஸ்ட் 9 காலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டார்.
- 1944 – மே 5 விடுதலை செய்யப்பட்டார்.
- 1944 ராஜாஜியின் CR திட்டத்தினை முகமது அலி ஜின்னாவுடன் விவாதம் நடத்தினார். (இந்தியா பாகிஸ்தான் பிரிவினை திட்டம்).
- 1947 ஆகஸ்ட் 15 இந்தியா சுதந்திரம் அடைந்தது. (கடைசிவரை இந்தியா பாகிஸ்தான் பிரிவினையை வேறுவழியின்றி எதிர்த்தார். இறுதியாக பிரிவினைக்கு ஒப்புக் கொண்டார்).
- **சமூக நல்லிணக்கத்திற்காக காந்தியின் கடைசி உண்ணாவிரத போராட்டம் (1948 ஜனவரி 13 17 வரை).**
- 1948, ஜனவரி 30 காந்தி நாதுராம் கோட்சே –வால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- காந்தியின் ஓவியத்தை வரைந்தவர் அதுல் டோலியா
- **பத்திரிக்கைகள்**
- **1. நவஜீவன் – 1919**
- **2. யங் இந்தியா – 1931**
- **3. ஹறிஜன் பத்திரிகை – 1933**
- **4. இந்தியன் ஒபீனியன் – 1903**
- **காந்தியின் முக்கிய வாசகம்**
- 'செய் அல்லது செத்துமடி (Do or Die – 1942)
- இறுதிவரை போராடு(Fight to Finish 1942)
- வெள்ளையனே வெளியேறு
- கிராமங்கள் இந்தியாவின் முதுகெலும்பு

- ஆங்கிலேயர்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால் பொய்மைக்கு எதிரானவன் அநீதிக்கு எதிரானவன்.
- **பிற தகவல்கள்**
- **காந்தியின் அரசியல் குரு கோபால கிருஷ்ண கோகலே**
- **காந்தியை மகாத்மா என அழைத்தவர் – ரவீந்திரநாத் தாகூர்**
- **காந்தியைத் தேசத்தந்தை என்றவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்,**
- பட்டேலை 'சர்தார்' என்று அழைத்தார்
- காந்தியின் சமாதி உள்ள இடம் ராஜ்கோட்

## ஜவஹர்லால் நேரு

- பிறப்பு: ஆனந்தபவன், அலகாபாத்
- பெற்றோர்: மோதிலால் நேரு, சொரூபராணி
- தந்தை: சுயராஜ்ஜிய கட்சியின் நிறுவனர்
- சிறப்பு: **நவீன இந்தியாவின் சிற்பி, ரோஜாவின் இராஜா, இந்தியாவின் ஆபரணம் வாழ்க்கை**
- 1912–இல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.
- 1916 லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் காந்தியை முதன் முதலாக சந்தித்தார்
- 1916–இல் கமலா கவுல் என்பவரை மணந்தார்.
- 1917 நவம்பர் 19 அன்று இந்திரா பிரியதர்சினி பிறந்தார்.
- 1919 இல் கிஷான் சபையின் துணைத் தலைவரானார்.
- 1919 – 1932 வரை The Independent' என்ற செய்தித்தாளை நடத்தினார்.
- 1920 காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்தற்காக 1921ல் நேரு முதல் முறையாகச் சிறைக்கு சென்றார்.

- வாழ்நாளில் 9 வருடங்கள் சிறையில் கழிக்க வேண்டிவந்தது சிறையில் இருந்த நாட்களில்,
- **உலக வரலாற்றின் காட்சிகள் (1934)**
- **சுயசரிதை (1936) மற்றும்**
- **இந்தியாவின் கண்டுபிடிப்பு(1946)** ஆகிய நூல்கள் எழுதினார்
- 1923– இந்திய தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர்.
- 1929–வாகூர் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமைத் தாங்கினார் பூரண சுயராஜ்ஜியம்' தீர்மானத்தை நிறைவேற்றினார்.
- **1937 – பைஸ்பூர் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமையேற்றார்**. (கிராமத்தில் நடந்த முதல் மாநாடு)
- 1940– தனிநபர் சத்யாகிரகத்தின் போது ஆச்சார்ய வினோபாவேவிற்கு அடுத்து இரண்டாவதாக கைது செய்யப்பட்டார்.
- தனது சுயசரிதையை 'An Autobiography என்ற தலைப்பில் எழுதினார். Toward Freedom என்ற பெயராலும் இந்நூல் அறியப்படுகிறது.
- 1947 ஆகஸ்ட் 15 அன்று இந்தியா சுதந்திரம் அடைந்தபோது **'விதியோடு செய்து கொண்ட ஒப்பந்தம்** என இந்தியா பாகிஸ்தான் பிரிவினையையும், '**உலகம் உறங்கும் போது இந்தியா விழித்துக் கொண்டது** எனவும் வர்ணித்தார்.
- **சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக மௌண்ட்பேட்டன் பிரபுவால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**
- **நேஷனல் ஹெறால்டு** என்ற பத்திரிக்கையை நடத்தியவர்
- **நேருவின் பொன்மொழிகள்**
- 19350 ஆண்டு இந்தியச் சட்டம் அடிமைப்பட்டயம்.
- ஒரு விதியோடு செய்து கொண்ட ஒப்பந்தம் (இந்தியா–பாகிஸ்தான் பிரிவின் போது)
- உலக மக்கள் அனைவரும் கொண்டிருக்கும் போது இந்தியா தூங்கிக் விழித்துக் கொண்டது. (சுதந்திரத்தின் போது)

- காலம் பொன் போன்றது
- நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து விட்டது (காந்தி மறைவின் போது)
- வேற்றுமையில் ஒற்றுமை
- **படைப்புகள்**
- **உலக வரலாற்றின் பார்வைகள் (1934)**
- **தி யுனிட்டி ஆப் இந்தியா (1941)**
- **தி டிஸ்கவரி ஆப் இந்தியா (1946)**

**அம்பேத்கர்**

- பிறப்பு: அம்பவாதே இரத்தினகிரி மாவட்டம், மகாராஷ்ரா
- பெற்றோர்: ராம்ஜி சக்பால் – பீமாபாய்
- தந்தை: இராணுவப்பள்ளி ஆசிரியர்
- ஆசிரியர் மகாதேவ் அம்பேத்கர்
- **கல்வி**
- சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.
- 1904 ஆம் ஆண்டு. இவருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. இங்கு எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.
- 1907 ஆம் ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார்.
- பிறகு, பரோடா மன்னரின் (சாயாஜிராவ்) உதவியுடன் மும்பை பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார்.
- கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.
- உயர் கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் ஆவார்.

- 1915 இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப் பட்டம் பெற்றார்.
- 1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார்.
- 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும், 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார்.
- அதே ஆண்டில் சட்டப்படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
- 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக **ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை** என்ற அமைப்பை நிறுவினார்
- **ஒடுக்கப்பட்ட பாரதம் இதழ் – 1927**
- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர **மஹத் சத்தியாகிரகம் (1927)** என்ற அமைப்பைத் தொடங்கினார்.
- சமாஜ் சமாத சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினார்.
- 1930 ஆம் ஆண்டு **நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை** நடத்தி வெற்றி கண்டார்.
- **1930 நவம்பர் முதலாவது வட்டமேசை மாநாடு** (இங்கிலாந்து) தமிழகத்தைச் சேர்ந்த இரட்டைமலை சீனிவாசனுடன் கலந்துகொண்டார்.
- **இவர் மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் கலந்துக்கொண்டார்.**
- **1931 செப்டம்பர் 24 காந்தி அம்பேத்கர் (பூனா ஒப்பந்தம்)**
- மூக் நாயக் (வாய்பேச முடியாதவர்களின் தலைவர்) –பத்திரிக்கை.
- **பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை – தனித்துவிடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பை ஏற்படுத்தினார்.**
- **சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் (1937**) தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றிபெற்றனர்.

- **பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை 1942 இல் தொடங்கினார்.**
- 1942–பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு உருவாக்கப்பட்டது.
- இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப்பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.
- 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.
- அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப் பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது
- **பாரத ரத்னா விருது 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.**
- பஞ்சாயத்துராஜ் – காந்தி (எதிர்) அம்பேத்கர்
- அம்பேதகரின் கருத்துப்படி கிராமம் என்பது வகுப்பு வாதம், சாதியமைப்பு போன்ற கொடுமையான யதார்த்தத்தைக் கொண்டுள்ளன இதனால் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படும் நிலை உருவாகும் என்று கருதினார்.
- ஆனால், சிறப்பான உள்ளாட்சி அரசாங்கத்தின் மூலமாக மட்டுமே மக்கள் அதிகாரம் செலுத்தமுடியும் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்தறியும் வகையில் காந்தி தனது சமூக அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொண்டார்.
- அம்பேத்கர் கருத்துப்படி, **"கிராமங்கள் என்பது அறியாமை மற்றும் வகுப்புவாதத்தின் இருப்பிடம்"** என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.
- கிராமங்களில் உள்ள ஆதிக்கமும் செல்வாக்கும் கொண்ட சமுதாயங்கள் தங்கள் ஏகபோகத்தை நிலைநாட்டிக் கொண்டு இதர சமுதாயங்களுக்குக் குரல் இல்லாமல் செய்கிறார்கள் என்றார்.
- இதன் விளைவாக, அம்பேத்கர் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் பஞ்சாயத்து ராஜ் என்ற சொல் கூட குறிப்பிடப்படவில்லை.

- ஆனால், இந்திய அரசமைப்பு சட்டம் பாகம் IV அரசுக்கொள்கை வழிகாட்டு நெறிகள் என்னும் பிரிவில் கிராம பஞ்சாயத்துக்களை உருவாக்குவதற்கான பொறுப்பினை மாநிலச் சட்டமன்றங்களுக்கு அளிக்கும் வகையில், ஒரு விதி கொண்டிருக்கப்பட வேண்டும் காந்தியவாதிகள் வலியுறுத்தினர் என்று

- **புத்தகங்கள் மற்றும் கட்டுரை**

1. பழங்கால இந்திய வர்த்தகம் (1915 கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப் சமர்ப்பிக்கப்பட்ட படிப்பிற்காக ஆய்வுக்கட்டுரை).

2. இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றி வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை (முனைவர் பட்டத்திற்காக சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை)

3. பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதிகளின் மதிப்பீடு மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவவாக்கம் பற்றிய ஓர் ஆய்வு

4. பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கள் M.Sc. பட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. **ரூபாயின் பிரச்சனைகள் 1923** ல் லண்டன் பொருளாதார பள்ளி D.Sc. பட்டம் வழங்கியது.

6. இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்–1918 ல் வெளியான கட்டுரை.

7. **இந்தியாவின் சாதிகள் 1916 ஆராய்ச்சிக் கட்டுரை** (இந்தக் கட்டுரைப் பின்னர் அரிய இந்தியப் புத்தகம் என்ற தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டது.

- **பொன்மொழிகள்**

- **கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்**

- சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைக் கற்றுக் கொடுக்கும் மதமே நான் விரும்புவது.

- "அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர்; பகுத்தறிவுச் செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் காணமுடியாது" என்று பெரியார் அவரை பாராட்டினார்

- **பாரத ரத்னா விருது**

- இந்திய அரசு, பாரத ரத்னா (இந்திய மாமணி) என்னும் உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு **1990**ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது.

## சுபாஷ் சந்திரபோஸ்

- பிறப்பு: கட்டாக், ஒரிசா
- பெற்றோர்: ஜானகிநாத் போஸ்– பிரபாவதி தேவி
- சிறப்பு பெயர் :நேதாஜி (பொருள்: தலைவர்) (காந்தியினால்)
- **இளமைக்கால வாழ்க்கை**
- சுபாஷ் சந்திர போஸ் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாள் ஒரிசாவின் கட்டாக்கில் ஜானகிநாத் போஸ் மற்றும் பிரபாவதி தேவி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.
- கட்டாக்கில் வெற்றிகரமான வழக்கறிஞர்களில் ஒருவரான ஜானகிநாத் போஸ் "ராய் பகதூர்" பட்டம் பெற்றவராவார். இவர் பின்னாளில் வங்காளத்தின் சட்டமன்ற உறுப்பினரானார்.
- 1946 ஆம் ஆண்டில் இடைக்கால அரசில் பொதுப் பணித் துறை, சுரங்கங்கள் மற்றும் மின்சக்தித் துறையின் அமைச்சராக நியமிக்கப்பட்ட சரத் சந்திர போஸ் இவரின் சகோதரராவார்.
- கல்கத்தா பல்கலைக்கழகத்தின் ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் சேர்ந்த போஸ் 1918 ஆம் ஆண்டு தத்துவத்தில் இளங்கலைப் பட்டப் படிப்பை முடித்தார்.
- இந்திய குடிமைப்பணித் தேர்வு எழுதுவதற்காக 1919 ஆம் ஆண்டில் அவர் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்றார்.
- **1920 ஆம் ஆண்டு ஜூலை மாதம் குடிமைப் பணித் தேர்வில் அவர் 4–வது இடத்தைப் பிடித்தார்.**
- 1921 ஆம் ஆண்டில், அவர் தனது குடிமைப் பணிப் பதவியைத் துறந்து இந்தியாவிற்குத் திரும்பினார்
- **அரசியல்**
- ஆரம்பத்தில் கல்கத்தாவில் காங்கிரஸின் தீவிர உறுப்பினராக இருந்த சித்தரஞ்சன் தாஸின் தலைமையில் சுபாஷ் சந்திர போஸ் பணியாற்றினார்.

- தேசப் பந்து என்றும் அறியப் பட்ட சித்தரஞ்சன் தாஸை தனது அரசியல் குருவாக போஸ் கருதினார்
- இவர் **"ஸ்வராஜ்"** எனும் செய்தித்தாளைத்தொடங்கியதோடு வங்காள மாகாண காங்கிரஸ் குழுவின் விளம்பரப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.
- மேலும் இவர் சித்தரஞ்சன் தாஸ் நிறுவிய **'பார்வர்டு'** எனும் செய்தித்தாளின் ஆசிரியராகவும் இருந்தார்.
- 1923ஆம் ஆண்டில் அகில இந்திய இளைஞர் காங்கிரஸின் தலைவராகவும் வங்காள மாநில காங்கிரஸின் செயலாளராகவும் போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1924 ஆம் ஆண்டில் கல்கத்தாவின் மேயராக தாஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட போது கல்கத்தா மாநாகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரியாக போஸ் பணியாற்றினார்.
- 1927 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரான போஸ், ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து சுதந்திரத்திற்காகப் பணியாற்றினார்.
- 1928 ஆம் ஆண்டு டிசம்பரின் இறுதியில் இந்திய தேசியக் காங்கிரஸின் வருடாந்திர மாநாட்டை கல்கத்தாவில் போஸ் ஏற்பாடு செய்தார்.
- 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜவஹர்லால் நேரு மற்றும் போஸ் ஆகியோரைச் செயலாளராகவும் S.சீனிவாச ஐயங்காரைத் தலைவராகவும் கொண்டு "இந்திய சுதந்திரக் குழு என்ற அமைப்பு தொடங்கப்பட்டது.
- சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்துக் கொண்டதற்காக அவர் கைது செய்யப்பட்டார். இம்முறைச் சிறையிலிருந்து வெளி வந்த போஸ் 1930 ஆம் ஆண்டில் கல்கத்தாவின் மேயராகும் அளவிற்கு உயர்ந்தார்.
- 1930 ஆம் ஆண்டுகளின் இடைப் பகுதியில ஐரோப்பாவிற்குப் பயணம் செய்த போஸ் அங்கு இந்திய மாணவர்களையும் பெனிட்டோ முசோலினி உள்ளிட்ட ஐரோப்பிய அரசியல்வாதிகளையும் சந்தித்தார்.
- இந்தக் காலகட்டத்தில் அவர் '**இந்தியப் போராட்டம்**' எனும் தனது புத்தகத்தின் முதல் பகுதியை ஆய்வு செய்து எழுதினார்
- இது 1920–1934 காலகட்டங்களில் நடந்த சுதந்திரப் போராட்டங்களை உள்ளடக்கியது.

- இப்புத்தகமானது 1935 ஆம் ஆண்டில் லண்டனில் வெளியிடப்பட்டாலும் அது அமைதியின்மையை ஊக்குவிக்கும் என்ற அச்சத்தில் ஆங்கிலேய அரசாங்கம் இப்புத்தகத்தை காலனிய நாடுகளில் தடை செய்தது.
- 1934 ஆம் ஆண்டில் ஆஸ்திரிய கால்நடை மருத்துவர் ஒருவரின் மகளான எமிலி ஷென்கலைச் போஸ் சந்தித்தார். பின்னர் 1937ஆம் ஆண்டில் அவரையே போஸ் மணம் புரிந்தார்.
- 1938 ஆம் ஆண்டில் தேசிய அளவிலான தலைவராகப் பொறுப்பேற்று காங்கிரஸின் தலைவராக நியமிக்கப்படுவதையும் போஸ் ஏற்றுக் கொண்டார்.
- **1938 ஆம் ஆண்டில் நேருவைத் தலைவராகக் கொண்ட தேசியத் திட்டக் குழுவை போஸ் உருவாக்கினார்.**
- இவர் **1938 (ஹரிபுரா) மற்றும் 1939 (திரிபுரி)** என 2 முறை காங்கிரஸ் மாநாடுகளுக்குத் தலைமை தாங்கினார்.
- 1939 ஆம் ஆண்டில் காந்தியின் ஆதரவு பெற்ற வேட்பாளரான பட்டாபி சீத்தாராமையாவிற்கு எதிராகப் போட்டியிட்டு திரிபுரி காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைவராக போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இச்சமயம் முத்துராமலிங்கத் தேவர் தென்னிந்தியாவின் அனைத்து வாக்குகளையும் போஸிற்கு ஆதரவாகத் திரட்டினார்
- 1939 ஆம் ஆண்டில் காங்கிரஸில் இருந்து விலக முடிவு செய்த போஸ் அதே ஆண்டு ஜூன் 22 ஆம் நாள் **பார்வடு பிளாக் கட்சி**யைத் தொடங்கினார்.
- தொடக்கத்திலிருந்தே முத்துராமலிங்கத் தேவர் போஸின் தீவிர ஆதரவாளர் ஆவார். இவர் போஸின் பார்வர்டு பிளாக் கட்சியிலும் இணைந்தார்.
- 1939 ஆம் ஆண்டு அக்டோபர் 6 ஆம் தேதி போஸ் மதுரைக்குப் பயணம் செய்த போது அவரை வரவேற்பதற்காக ஒரு பிரம்மாண்ட ஊர்வலத்தைத் முத்துராமலிங்கர் ஏற்பாடு செய்திருந்தார்.
- சிறு வயது முதலே விவேகானந்தர் மீது ஈடுபாடு உடையவராய் திகழ்ந்தார்.
- **1920 இல் பொதுப்பணி நிர்வாகத் தேர்வில் வெற்றி பெற்றார்.**

- அவர் 1921 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றினார்.
- நேதாஜி, இளைஞர்களும், பொதுமக்களும் தேசிய உணர்வு பெறக் காரணமாய் திகழ்ந்தார்.
- ஏராளமான இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெறச் செய்தார்.
- 1924 அவசரச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் அரசு கொல்கத்தா மத்திய சிறையில் அடைத்தது.
- 1938ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் ஹரிபுரா மாநாடு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் 1939 ஆம் ஆண்டு திரிபுரா மாநாட்டிலும் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1939–ல் அவர் பார்வர்டு பிளாக் கட்சியை தொடங்கினார்
- 1939 ஆகஸ்டில் காங்கிரஸின் அனைத்துப் பொறுப்புகளிலும் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.
- காங்கிரசுடனான கருத்து வேறுபாடு மற்றும் கைது இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்த போது, காங்கிரஸ் தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் இந்தியாவின் சார்பாக போரை அறிவிக்க வைசிராய் லின்லித்தோ பிரபு எடுத்த முடிவை எதிர்த்து ஒரு பிரம்மாண்ட சட்ட மறுப்பு இயக்கத்திற்கானப் பரப்புரையை போஸ் முன்மொழிந்தார்.
- இரண்டாம் உலகப் போரின் போது ஆங்கிலேயருக்கு உதவும் காங்கிரசின் முடிவையும் போஸ் கடுமையாக எதிர்த்தார்
- **"இரத்தத்தைக் கொடுங்கள், நான் உங்களுக்குச் சுதந்திரத்தைத் தருகிறேன்"** என்ற அவரின் அழைப்பிற்கு மக்களிடம் மிகப்பெரிய அளவில் பிரதிபலிப்பு இருந்தது.
- விமான விபத்தில் உயிர் இழந்ததாக நம்பப்படுகிறது.
- **1992–பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.**
- **படைப்புகள்**
- 1. **இந்தியப் போராட்டம் (1942)**
- **2. ஒரு இந்திய சன்னியாசி**

- **3. தேசத்தின் யோசனைகள்**
- **4. எமிலி செங்கலுக்கு கடிதங்கள்**
- **பொன்மொழிகள்**
- ஜெய் ஹிந்த்
- டெல்லி சலோ
- ரத்தத்தைக் கொடுங்கள் சுதந்திரத்தைத் தருகிறேன்

**பகத்சிங்**

- பிறப்பு ஜார்ன்வாலா வயல்பூர் மாவட்டம் பஞ்சாப்
- (தற்போதைய பாகிஸ்தான்).
- பெற்றோர்: கிஷன்சிங் வித்யாவதி கவுர்
- சிறப்பு பெயர் சாகித்–இ–ஆசாம்
- வாழ்க்கை
- இவர் தயாநந்தா ஆங்கிலோ வேதிக் பள்ளியில்
- தொடக்கக் கல்வியையும் பின்னர் லாகூரில் அமைந்த தேசியக் கல்லூரியில் கல்லூரிப் படிப்பையும் முடித்தார்.
- பகத்சிங்கின் 14 ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது.
- 1923 கல்லூரிகளில் பஞ்சாப் ஹிந்தி சாகித்திய சம்மேளன் நடத்திய கட்டுரைப் போட்டியில் பஞ்சாபின் துயரங்கள் குறித்த கட்டுரைக்கு பரிசுப் பெற்றார்.
- பத்திரிக்கைகளில் பல்வந்த் இரஞ்சித் மற்றும் வித்ரோகி என்ற புனைப்பெயர்களில் கட்டுரை எழுதியுள்ளார்.
- கிர்த்தி விவசாய கட்சியின் இதழான கிர்த்தியிலும் வீர் அர்ஜூன் என்ற செய்தித்தாள்களிலும் சுருக்கக் கட்டுரைகள் எழுதியுள்ளார்
- **நவ்ஜவான் பாரத் சபா (1926), ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன்** ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார்.

- பஞ்சாப் நவஜிவன் சபா என்ற அமைப்பை உருவாக்கினார்.

- 1928 இல் அதனைத் தொடர்ந்து ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்று பகத்சிங்காலும் அவரது தோழர்களாலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.
- ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.
- 1929 ஏப்ரல் 8 இல் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசினார் குண்டு எவரையும் கொள்ளவில்லை.
- ராஜகுரு. சுகதேவ். ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர்.
- **'நான் ஏன் நார்த்திகனாக இருக்கிறேன்"** அவர் 1930 இல் வாகூர் மத்திய சிறையில் இருந்து எழுதியக் கட்டுரை
- 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கபட்டது. லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- **பகத்சிங்கின் பொன்மொழி:**
- **"புரட்சி என்ற வாள் கருத்துகள் என்ற சாணைக்கல்லில் கூரத்தீட்டப்படுகிறது." நீதிமன்றத்தில் பகத்சிங்கின் முழக்கம்**
- புரட்சி என்பது வெறும் குண்டு எறிதலோ கைத்துப்பாக்கியால் சுடுவதோ அல்ல. புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமை ஆகும். சுதந்திரம் என்பது அனைவரின் அழியாத பிறப்புரிமை ஆகும். உழைப்பாளிகள், சமூகத்தின் உண்மையான ஆதரவாளர்கள் ஆவர். இந்தப் புரட்சியின் பலிபீடத்தில் நாம் மாபெரும் லட்சியத்துக்காக அளிக்கும் எந்தத் தியாகமும் அதற்கு முன் பெரிதல்ல"

### கோபால் கிருஷ்ண கோகலே

- 1899 முதல் 1902 வரை, பம்பாய் சட்டமன்றக் குழு உறுப்பினர்

- 1902 – 1915 வரை இம்பீரியல் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில்
- இம்பீரியல் சட்டமன்றத்தில், 1909 இன் மோர்லி–மிண்டோ சீர்திருத்தங்களை வடிவமைப்பதில் கோகலே முக்கிய பங்கு
- 1905 – பனாரஸ் அமர்வில் INC இன் தலைவர் மிதவாதிகளுடன் தொடர்புடையவர்
- 1905 – இந்தியக் கல்வியின் விரிவாக்கத்திற்காக சர்வண்ட்ஸ் இந்தியா சொசைட்டியை நிறுவினார்.
- 1907 – இன்றைய மியான்மரில் உள்ள மாண்டலேயில் சிறை வைக்கப்பட்ட லாலா லஜபதி ராயின் விடுதலைக்காக தீவிர பிரச்சாரம் செய்யப்பட்டது.
- 1908 இல், கோகலே ரானடே இன்ஸ்டிடியூட் ஆப் எகனாமிக்ஸ் நிறுவனத்தை நிறுவினார்.
- கோவிந்த் ரானடேவால் தொடங்கப்பட்ட சர்வஜனிக் சபா இதழுடன் தொடர்புடையது. ஆங்கில வார இதழான தி ஹிடவாடா (தி பீப்பிள்ஸ் பேப்பர்) தொடங்கப்பட்டது.
- **மகாத்மா காந்தியால் தனது அரசியல் குருவாகக் கருதப்பட்டவர்.**
- காந்தி குஜராத்தி மொழியில் 'தர்மாத்மா கோகலே' என்ற தலைப்பில் தலைவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட புத்தகத்தை எழுதினார்.

### சுரேந்திரநாத் பானர்ஜி

